LIBRARY
28 FEB 1959
STATE LEGISLAT

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, the 29th September 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : சுப்பைய்யா முதலியார் அவர்கள் கொஞ்ச நேரம் கழித்து வருவதாக எனக்கு டெலிபோன் செய்திருக்கிருர். ஆகவே, ஷார்ட் நோட்டீஸ் கேள்வி 28 அவர் வந்தபிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Upper Periyar and Kallaru Schemes

* *S.N.Q.* 29.—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Upper Periyar and Kallar Schemes are remunerative schemes;

(*b*) the extent of lands which will be irrigated by these schemes;

(*c*) when the schemes will come into effect; and

(*d*) the progress so far made in regard to these schemes?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The Government have not examined the Upper Periyar and Kallar schemes.

(*b*), (*c*) & (*d*) Do not arise.

SRI N. R. THIAGARAJAN : கேரள சர்க்காருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி அதற்குப் பிறகு இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், எவ்வளவு ரூபாய் செலவு ஆகும், எத்தனை எக்கர்களுக்குத் தண்ணீர் கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அவர்களோடு பேசிய பிற்பாடுதான் தெரியும்.

SRI N. R. THIAGARAJAN : பெரியாறு, கல்லாறு ஆகிய இரண்டு திட்டங்களும் மதுரை ஜில்லாவிற்கு மிகவும் முக்கியமானது. அதுபற்றி நீண்ட நாட்களாகவே பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தால் தஸ்தவேஜுகளில் இருக்கும் விவரங்களைத் தயவுசெய்து கூற முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : இந்த இரண்டு திட்டங்களும் வந்தால், மதுரைக்கு மட்டுமல்ல, ராமனுதபுரத்திற்கும் பெரிய பயனை அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். முழு விவரங்களையும் கனம் அங்கத்தினர் அறிய விரும்பினுல், தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.